**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் டிசம்பர் மாதம் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**E.A.No.03/2025**
**in**
**E.P.No.04/2023**

கணேசபாண்டி ...மனுதாரர்/வாதி

/எதிர்/

லெட்சுமி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 01.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அரிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் தாவா சொத்து விபரத்தில் "சர்வே எண்.433/4 யுஇ" என்பதை நீக்கி விட்டு அதற்கு பதிலாக "433/4A"என்று திருத்தம் செய்து மனுவை மேல் நடத்தக்கோரி கட்டளை 06 விதி 17, 18 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவா சொத்து விபரத்தில் சர்வே எண்.433/4A என்பதற்கு பதிலாக 433/4 யுஇ என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டு என்றும், மேற்படி தட்டச்சுப்பிழையை சரிசெய்ய ஏதுவாக மனுவில் திருத்தங்களை அங்கீகரித்து கொள்ளவது அவசியமாகிறது என்றும், மேற்படி விபரத்தை திருத்தம் செய்வதால் பிரதிவாதிகளுக்கு எவ்வித

பாதகமும் ஏற்படப் போவதில்லை என்பதால் மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், நிறைவேற்றுதல் மனு மீது கடந்த 25.08.2025ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையில் "அசல் வழக்கில் சர்வே எண்.433/4A-யை பொறுத்து தீர்ப்பாணை ஏற்பட்டுள்ள நிலையில் தீர்ப்பாணையில் இல்லாத வேறு ஒரு சொத்தான சர்வே எண்.433/4யுஇ என்ற சொத்தை பொறுத்து நிறைவேற்றுதல் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், சர்வே எண்ணை திருத்தம் செய்ய சிறிதும் முயற்சி செய்யாது நீதிமன்றத்தில் தவறான தகவல்களை கூறி கடந்த 25.08.2025ம் தேதியிட்ட உத்தரவை பெற்றுள்ளதாகவும், மனுவிலும் இல்லாத சர்வே எண்.433/4A ல் கண்ட சொத்தில் உள்ள மூன்று வீடுகளின் மின் இணைப்பை அமினா சட்டவிரோதமாக துண்டித்து விட்டதாகவும், நிறைவேற்றுதல் மனுவில் தட்டச்சு பிழை இருப்பதாக கூறி நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தின் சர்வே எண்ணை பொறுத்து திருத்தம் செய்யக்கோரியிருப்பது சட்டப்படி தவறு என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுவானது நிறைவேற்றுதல் மனுவில் தாவா சொத்து விபரத்தில் சர்வே எண்.433/4A என்பதற்கு பதிலாக 433/4யுஇ என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி தட்டச்சுப்பிழையை சரிசெய்ய ஏதுவாக மனுவில் திருத்தங்களை மேற்கொள்ள அனுமதி வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் சர்வே எண்ணை திருத்தம் செய்ய சிறிதும் முயற்சி செய்யாது நீதிமன்றத்தில் தவறான தகவல்களை கூறி கடந்த 25.08.2025ம் தேதியிட்ட உத்தரவை பெற்றுள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

நிறைவேற்றுதல் மனுவில் கடந்த 25.08.2025ம் தேதி சொத்தினை அகற்றி வாதி வசம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் சர்வே எண்.433/4யுஇ என தவறாக குறிப்பிடப்பட்டதற்கு தட்டச்சு பிழையே காரணம் என்பதால் சர்வே எண்.433/4யுஇ என்பதனை சர்வே எண்.433/4A என கொண்டே இம்மனுவின் மீதான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின்படி நிறைவேற்றுதல் மனுவில் திருத்தங்களை மேற்கொள்ள இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்களை மனுதாரருக்கு வழங்குவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும் மனுதாரர் தாக்கல் செய்த மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 05.12.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.05 17:18:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.05 17:18:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.